## இலங்கை போக்குவரத்து சபை – 2015

இலங்கை போக்குவரத்து சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துதல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், அகல் விரிவான வருமானங்கள் மற்றும் செலவுகள் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலகதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நிச்சயிக்க முடியாதுள்ளளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனத்தின் இடையறாமல் நீடித்தல்

சபை தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்தமையால் தேறிய சொத்துக்கள் பாரிய அளவில் அரிப்புக்கு ஆளாகியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி அளவில் தேறிய சொத்துக்கள் ரூபா 28,977,203,239 இற்கான மறை பெறுமதியொன்றாக இருந்தது. திறைசேரியின் அல்லது அரசின் நிதி உதவிகள் இன்றி நிறுவனத்தை இடையறாது நடாத்திச் செல்லல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று ஏற்படக் கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி நிலைமையை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப் பொறுப்புக்களை மேவகை செய்வதற்காக காணப்படும் நடைமுறைச் சொத்துக்களின் தொகை மொத்த நடைமுறைப் பொறுப்புக்களில் 34 சதவீதத்தை விட மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2010 ஆண்டின் போது இம்மட்டம் 42 சதவீதமாக இருந்தது. செலுத்த வேண்டிய பணத்தை உரிய முறைப்படி செலுத்தாமை, அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை மற்றும் நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் மீதிகள் இந் நிலைமை ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நியமமொன்றின் மூலம் தேவைப்படும் மற்றும் அனுமதி வழங்கியுள்ள சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவுகளை எதிரீடு செய்யக் கூடாது எனினும் பின்வரும் எதிரீடு செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) சமர்ப்பித்திருந்த அட்டவணைகளின் பிரகாரம் 30 வங்கிக் கணக்குகளில் அனுகூலமான காசு மீதிகள் ரூபா 27,390,759 இனால் மேலதிகப்பற்று மீதிகளை எதிரீடு செய்திருத்தல் மற்றும் 14 வங்கிக் கணக்குகளில் மேலதிகப்பற்று மீதிகள் ரூபா 20,691,606 தொகை அனுகூலமான மீதிகளுடன் எதிரீடு செய்திருந்த காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் வங்கி காசு மீதி மற்றும் வங்கி மேலதிகப்பற்று முறையே ரூபா 45,853,652 தொகை மற்றும் ரூபா 45,853,652 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) டிப்போக்கள் மற்றும் 3 பிராந்திய அலுவலகங்களில் கூட்டுத்தொகை ரூபா 649,233,033 தொகையான வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 32,700,544 இற்கான கடன்கொடுத்தோர் வரவு மீதிகளை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி என ரூபா 616,532,489 தொகை காட்டப்பட்டிருந்தது.

(iii) கழுத்துறை சாரதிகள் பயிற்ச்சி பாடசாலையின் ரூபா 12,657,758 தொகைக்கான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் இருந்து ரூபா 46,080 இற்கான செலவு மீதியொன்றினை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iv) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 66,516,172 தொகையான மீதியிலிருந்து ரூபா 45,568,987 இற்கான வரவு மீதியொன்றினை எதிரீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 07**

மீளாய்வாண்டிற்கான இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 120,428,954 இற்கான இருப்பு சீராக்கல் கணக்கின் மீதி மற்றும் ரூபா 42,471,837 தொகைக்கான எரிபொருள் மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு அல்லாத விடயங்களின் கீழ் சீராக்கல்கள் செய்திருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கிய சந்தர்ப்பம் முதல் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் பூராகவும் முறையான அடிப்படையில் பெறுமானத்தேய்வு கழிக்க வேண்டிய போதிலும் சபை மீளாய்வாண்டின் போது கைக்காசுக்கு மற்றும் லீஸின் அடிப்படையில் கொள்வனவு செய்து பயன்படுத்தியிருந்த ரூபா 51,541,669 தொகை பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 58 ஆம் பந்தியின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை வெவ்வேறாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வேறாக காட்டப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக நிதி நிலைமைக் கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்கள் என ரூபா 319,799,319 தொகை காட்டப்பட்டிருந்தது. அந்த மொத்தப் பெறுமதியில் 50 சதவீதம் அதாவது ரூபா 159,899,660 தொகை கட்டிடங்களின் பெறுமதி என கணித்து அப் பெறுமதியின் மீது 2.5 சதவீதம் வருடாந்தப் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டிருந்தமையால் 2015 ஆண்டளவில் கட்டிடங்களின் கிரயத்தை மிகைத்து ரூபா 1,048,812 தொகை பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

(iii) நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 3,037,266,897 கிரயத்திற்கான 988 சொத்து விடயங்கள் முற்றாக பெறுமானத்தேய்வு மேற்கொண்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுத் தவறு இலங்கை கணக்கீட்டு நியயம் 08 இன் பிரகாரம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) 2006 ஆண்டு முதல் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,004,452,160 தொகை பெறுமதியான 825 பஸ் வண்டி என்ஜின்கள் பஸ் வண்டிகளில் பொருத்தும் போது குறிப்பிட்ட பஸ் வண்டியின் பெறுமதியுடன் மூலதனப்படுத்தி வாழ்க்கைக் காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக, கொள்வனவு செய்திருந்த பஸ் வண்டி என்ஜின்கள் வேறாக கணக்கீடு செய்யப்பட்டு 20% வீதம் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 31(பீ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குத்தகை பொறுப்புக்கள் காட்டப்படும் போது அந்தக் குத்தகைச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அல்லது செலுத்தப்பட வேண்டிய குத்தகைத் தவணைகளின் தற்போதைய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதி காட்டப்பட வேண்டியிருந்ததுடன், அதனை பின்வருமாறு வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. அதற்கு முரணாக சபையினால் குத்தகை நிதிப் பெறுமதி மீது, வட்டித்தொகை தவணைத் தொகை

கூட்டிய முறை (Sum of digit Method) மீது கணித்து ரூபா 10,032,569,943 தொகை குத்தகைப் பொறுப்பின் கீழ் காட்டப்படல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- காலப்பகுதி இறுதியில் உள்ளவாறு குறைந்த குத்தகை பெறுமதி மற்றும் அதனது பெறுமதியினை இணக்கஞ் செய்தல்.
- ஒரு வருடத்திற்கு குறைவில்லாத காலமொன்றிற்கு, வருடத்திற்கு மிகையான மற்றும் 05 வருடங்களை விட குறைவான மற்றும் 05 வருடங்களை விட கூடிய காலப்பகுதி தொடர்பாக கணக்கு காலப்பகுதி இறுதியில் காணப்பட்ட எதிர்கால குத்தகை தவணைகளின் கூட்டுத்தொகை மற்றும் அவற்றின் தற்போதைய பெறுமதியின் கூட்டுத்தொகை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் பின்னைய ஊழியர் நலன்களின் பெறுப்புக்கள் எதிர்வு கூறிய அலகு செலவு முறைமை அடிப்படையாக பிழையற்ற மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாற செயற்படாமல் ஒவ்வொரு தரத்தில் மத்தியிலுள்ள சம்பளத்திற்காக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் மேலதிகப் படி சேர்த்து உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் மொத்த பணிக்கொடை ஏற்பாட்டுத் தொகை கணிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 09 டிப்போக்களின் வங்கி கணக்குகளுக்கு நேரடியாகப் பெறுவனவுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் முறையே ரூபா 36,612,935 தொகை மற்றும் ரூபா 2,629,593 தொகை வருமானங்கள் மற்றும் செலவுகள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. 07 சந்தர்ப்பங்களில் காசேட்டில் இரண்டு முறை வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,973,578 தொகை சரிசெய்திருக்காததுடன் 40 சந்தர்ப்பங்களில் நேரடியாக செலவு வைத்தல், ரூபா 7,885,175 தொகை நீண்ட காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கைக்காசு மற்றும் லீஸிங் முறையில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,751,869,409 தொகை பெறுமதியான பஸ் வண்டிகளுக்காக ரூபா 201,247,403 தொகை பெறுமானத்தேய்வினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டின் போது பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கும் போது இடைக் கொடுப்பனவு சம்பளங்கள் மற்றும் வேதனங்களுடன் கூட்டிய காரணத்தினால் ரூபா 357,740,000 தொகை மிகையாக பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 31,619,700 தொகை பெறுமதியான 900 இலக்றோனிக் டிக்கட் இயந்திரங்களை கொள்வனவு செய்து டிப்போக்களுக்கு வினியோகிக்கப்பட்டிருந்த போதிலும் டிப்போக்களின் சொத்துக்களின் கீழ் அவை ரூபா 28,863,689 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் மீதி மற்றும் செலுத்த வேண்டிய தலைமை அலுவலகத்தின் நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 2,756,011 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) கதிர்காமம் ஓய்வு விடுதியை அபிவிருத்தி செய்தல் 2015 ஜுலை 16 திகதி பூர்த்தி செய்திருந்த போதிலும் அதனது நிர்மாண வேலை கிரயமாகிய ரூபா 14,813,358 தொகை கட்டிடக் கணக்கிற்கு மூலதனப்படுத்தப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த நாள் முதல் திசெம்பர் 31 திகதி வரை அக் கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) ஹொரவ்பத்தான புதிய டிப்போவின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2012 ஜூன் 10 திகதி முதல் சபையின் அலுவல்களுக்காக பயன்படுத்தியிருந்த போதிலும், அதனது நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 32,436,772 தொகை கட்டிடக் கணக்குகளுக்கு மூலதனப்படுத்தப்படாமல் நடைமுறை வேலை எனக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்தக் கட்டிடங்களுக்காக கடந்த 3 1/2 வருடங்கள் தொடர்பாக ரூபா 2,838,218 தொகையான பெறுமானத்தேய்வு கணித்து கணக்கீடு செய்தல் நழுவியுள்ளது.

(எ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் கூட்டுத்தொகை ரூபா 9,000,000 தொகைக்கான இரண்டு நிலையான வைப்புக்களக்காக கிடைத்திருந்த ரூபா 4,548,371 தொகை வட்டியினை மீண்டும் முதலீடு செய்திருந்த போதிலும் அப் பெறுமதினை முதலீட்டுக் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக பெற வேண்டிய வருமானக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஜூன் 01 திகதி முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான நிலையான வைப்பு ஒன்று தொடர்பாக பெற வேண்டிய வட்டி ரூபா 162,503 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சிவில் பாதுகாப்புப் படையணிக்கு வழங்கியிருந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக பெறவேண்டிய ரூபா 8,183,702 தொகையினை இரண்டு தடவைகள் ஆண்டிற்கான வருமானத்திற்கு மற்றும் பெறவேண்டிய வருமானங்கள் என கணக்கீடு செய்திருந்தமையால் அந்தப் பெறுமதியினால் ஆண்டிற்கான நட்டம் குறைவாகவும் மற்றும் பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் 2015 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,726,367 இற்கான கடை வாடகை வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பாவணைக்கு உதவாத பஸ் வண்டிகளின் பெறமதி ரூபா 1,592,669,139 தொகையாக இருந்ததுடன் பஸ் வண்டி ஒன்றின் கழிவுத் துண்டுப் பெறுமதி ரூபா 1,000 வீதம் இனங்கண்டிருந்த போதிலும் அந்த கழிவுத் துண்டுப் பெறுமதியினையும் மிகைத்து ரூபா 2,924,746 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம், ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,146,560,160 தொகையாக இருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,147,944,061 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 1,383,901 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 427 பஸ் வண்டிகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 60,759,000 இற்கான வருமானம் ஒன்று ஏனைய வருமானங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் தொழிநுட்ப பிரிவின் தகவல்களின் பிரகாரம் 584 பஸ் வண்டிகளின் விற்பனை செய்ததன் மூலம் ரூபா 85,424,111 இற்கான வருமானம் ஒன்று கிடைத்திருந்ததென குறிப்பிட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களின் வருமானம் மற்றும் தொழிநுட்ப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 24,665,111 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) கழுத்துறை சாரதிகள் பயிற்சி பாடசாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதுளை டிப்போவில் இருந்து ரூபா 3,091,346 தொகை மற்றும் ஊவா, சப்ரகமுவ பிராந்திய அலுவலகத்தில் இருந்து மற்றும் கதிர்காமம் டிப்போவில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 6,756,442 தொகை பெற வேண்டிய மீதிகள் எனக் காட்டப்பட்டிருந்தது. எனினும் பதுளை டிப்போவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதி என ரூபா 2,871,970 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உடஹமுல்ல சாரதிகள் பயிற்சிப் பாடசாலையில் இருந்து தலைமை அலுவலகத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை என ரூபா 1,033,171 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் உடஹமுள்ள சாரதிகள் பயிற்சி பாடசாலையின் கணக்குகளின் பிரகாரம் தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை என ரூபா 570,834 தொகையாக இருந்தமையால் ரூபா 462,337 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 2.2.5 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்கின் வரவு மற்றும் செலவு மீதிகளைச் சீராக்கல் செய்த பின்னர் ரூபா 3,941,993 தொகைக்கான செலவு மீதி நீண்ட காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிராக காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | வியாபாரக் கடன்கொடுத்தோர் | 228,781,504 | விரிவான அட்டவணை மற்றும் காலப்பகுப்பாய்வு |
| (ii) | வேலைத்தள கடன்கொடுத்தோர் | 64,187,315 | |
| (iii) | காசாளர் நிலுவை மீதி | 1,271,364 | |
| (iv) | நடத்துனர் ஒழுங்கீனங்கள் | 15,249,736 | |
| (v) | பலவின கடன்பட்டோர் | 99,647,683 | |
| (vi) | பெற வேண்டிய வருமானங்கள் | 253,051,561 | |
| (vii) | பணிக்கொடை கொடுப்பனவு | 3,641,172,333 | பணம் செலுத்திய உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் |
| (viii) | வியாபாரக் கடன்பட்டோர் மீதி | 3,193,451 | அட்டவணைகள் |
| (ix) | நடைமுறை கணக்கு, சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கு | 2,087,218,462 | 91 கணக்குகள் தொடர்பான மீதியினை உறுதிப்படுத்திய கடிதம் |
| (x) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 319,799,318 | சொத்துக்கள் பதிவேடு, விரிவான அட்டவணை மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| (xi) | நாட்குறிப்பு 06 | 5,016,723,610 | நாட்குறிப்புக்கள் தொடர்பான விவரம் |
| (xii) | இருப்பு | 744,821,576 | விரிவான இருப்பு அறிக்கை |
| (xiii) | செயலாற்றுகை பிணைமுறி | 1,312,727 | விரிவான ஆவணங்கள் |
| (xiv) | ஹொரவ்பத்தான புதிய டிப்போ நிர்மாணித்தல் | 4,548,536 | மதிப்பீட்டுத் தொகையை மிகைத்ததற்கான அங்கீகாரக் கடிதம் |
| (xv) | பிரயாண அனுமதிப்பத்திர வருமானக் கழிவு | 399,385,714 | கழிவு அனுமதித்தற்கான ஆவணங்கள் |
| (xvi) | வங்கிக்கு செலவு வைக்கப்படாத மீதிகள் | 2,843,042 | செலவு மீதிகளின் காலப்பகுப்பாய்வு |
| (xvii) | காசோட்டிற்கு மிகையாக வரவு வைக்கப்பட்ட மீதிகள் | 457,460 | காலத்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள், விரிவான அட்டவணைகள் |
| (xviii) | வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ள வரவு வைக்கப்படாத காசோலைகள் | 7,090,334 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் விரிவான அட்டவணைகள் |
| (xix) | செயற்படாத கணக்குகள் - வரவு | 9,935,375,095 | காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (xx) | செயற்படாத கணக்குகள் - செலவு | 26,054,948,782 | காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் |

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையான காலப்பகுதியில் பயங்கர விபத்துக்களின் மூலம் உயிரிழந்த ஊழியர்களுக்கு செலுத்திய சம்பளமாக கிரியுள்ள டிப்போவுக்கு ரூபா 1,569,519 தொகை மற்றும் அலவ்வ டிப்போவுக்கு ரூபா 2,174,792 தொகை திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

(ஆ) இலங்கை போக்குவரத்துச் சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், தனியார் போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் என்பவற்றில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 40,604,269 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம்

ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் ரூபா 36,922,769 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 5 பிராந்திய அலுவலகங்கள் தொடர்பாக வெளிசாராருக்கு செலுத்த வேண்டியிருந்த 10 வருடங்களை விட பழமையான கூட்டுத்தொகை ரூபா 12,070,995 தொகையான மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பதுளை டிப்போவில் 2011 ஆண்டு முதல் காணப்படும் நிலுவை காசாளர் மீதி ரூபா 33,662,732 தொகை மற்றும் மொனறாகாலை மற்றும் பதுளை டிப்போகளின் பெற வேண்டிய மீதிகள் முறையே ரூபா 9,260,302 தொகை ரூபா 8,455,334 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் கொள்வனவு செய்தல் முற்பணக் கணக்கில் தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 1,778,661,537 தொகை எனப்படும் 93 சதவீதம் 1 வருடங்களுக்கு முன்னரும் 38 சதவீதம் எனப்படும் ரூபா 721,380,174 தொகை 2 வருடங்களுக்கு முன்னரும் வழங்கியிருந்த முற்பணங்களாக காணப்பட்டதுடன் அவை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பாக பெற வேண்டிய வருமானங்களின் ரூபா 193,375,188 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் அப் பணத்தில் சேமலாப நிதியக் கடன் கணக்கு தொடர்பாக பெற வேண்டிய மொத்தத் தொகையில் 81 சதவீதமாக காணப்பட்டதுடன் அதற்காக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய இராணுவ பிரயாண அனுமதிப்பத்திரம் மற்றும் விஷேட வாடகை வருமானம் முறையே ரூபா 41,784,537 தொகை மற்றும் ரூபா 188,616,652 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2008 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 திகதி வரை பெற வேண்டிய வருமானங்களின் கீழ் பண்டாரவலை டிப்போவின் மீதி ரூபா 1,108,756 இல் இருந்து ரூபா 12,537,456 தொகை வரை அதிகரித்துக் கொண்டு சென்றிருந்ததுடன் அதன் பிரகாரம் அறவீடு செய்யப்படாதவைகளின் விகிதாசாரம் 43 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சு ஒன்றில் காணப்பட்டது.

(ஐ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் வாடகைக்கு கொடுத்துள்ள கடைகளுக்காக 2015 ஆண்டு தொடர்பாக பில் போடப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் பில்பத்திரக் கட்டணங்கள் முறையே ரூபா 2,314,383 தொகை மற்றும் ரூபா 1,197,133 தொகைகளாகக் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் பணமாக பெற்ற பெறுமதி ரூபா 1,816,471 தொகை மற்றும் ரூபா 866,601 தொகையினை மாத்திரம் கணக்கீடு செய்திருந்த காரணத்தினால் பெற வேண்டிய மீதிகள் மற்றும் வருமானம் ரூபா 828,444 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தில் நிலுவைக் கடை வாடகை வருமானம் என ரூபா 1,863,414 இற்கான தொகை ஒன்று 2009 ஆண்டு முதல் காணப்படுவதுடன் அத் தொகையை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 2003 ஜூன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 8.2.2 | மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் ரூபா 19,733,819 தொகை முதலீடு செய்திருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கத்தை மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 1981 இன் 26 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 16 | சபையின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களை சேர்ந்த ரூபா 1,662,003,377 இற்கான பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரிவு 5(1) மற்றும் 1992 இன் 62 ஆம் இலக்க (திருத்திய) சட்டம் | சேவை முடிவுற்று 30 நாட்களிட்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் 2015 மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளின் போது ஓய்வு பெற்றிருந்த 5 டிப்போக்களைச் சேர்ந்த 172 ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 67,244,193 இற்கான பணிக்கொடைக் கொடுப்பனவு 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருடம் முதல் 19 வருடங்கள் வரையான வீச்சில் தாமதமொன்று ஏற்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணம் 177(1) | பெறப்படும் பணம் நாளாந்தம் அல்லது கூடிய விரைவில் அனுப்பப்பட வேண்டிய போதிலும், பதுளை டிப்போவில் 2012 ஆண்டு முதல் 2015 வரை ரூபா 34,249,522 தொகையொன்று குறைவாக வங்கியில் இடப்பட்டிருந்ததுடன் டிப்போவினால் குறைவாக வைப்புச் செய்தல்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 177(3) | வலப்பனை மற்றும் தெல்தெனிய டிப்போக்களினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது சேகரிக்கப்பட்டிருந்த போது ரூபா 1,214,386 இற்கான வருமானம் ஒன்றினை 2015 திசெம்பர் 31 வரை வங்கியில் இட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப் பிரமாணம் 395(ஆ) | மீளாய்வாண்டின் போது சபையினால் பேணப்பட்டு வரும் 156 நடைமுறைக் கணக்குகளில் 59 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iv) நிதிப் பிரமாணம் 395(உ) | தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 7 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 20,838,069 தொகைக்கான வழங்கியிருந்த ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மற்றும் வங்கிக் கணக்கு ஒன்றில் கூட்டுத்தொகை ரூபா 129,845 இற்கான வைப்புச் செய்திருந்த போதிலும் தேறப்படாத காசோலைகள் தொடர்பான அட்டவணை வங்கி இணக்கக் கூற்றுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (v) நிதிப் பிரமாணம் 396(ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 95 வங்கி கணக்குகளில் 15 வங்கிக் கணக்குகளின் இணக்கக் கூற்றுக்களில் 06 மாதங்களை கடந்துள்ள வழங்கியிருந்த போதிலும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 58 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,880,020 தொகை காணப்பட்டது. இந்த காசோலைகள் சுமார் 04 வருடங்கள் முதல் நீண்ட காலமாக காணப்பட்ட போதிலும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (vi) நிதிப் பிரமாணம் 395(ஏ) | அலுவலர்களுக்கு வேலைகள் சாட்டுதல் செய்யும் போது காசேடு தயாரிப்பதுடன் தொடர்பு இருக்காத நபர் ஒருவருக்கு வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் கருமம் சாட்டப்பட வேண்டுமெனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vii) நிதிப் பிரமாணம் 757 | மீளாய்வாண்டிற்காக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 11,633,840,656 தொகை பெறுமதியான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் சபைக்கு சொந்தமாக இருந்த போதிலும் அனைத்து சொத்துக்களும் உள்ளடக்கக் கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 751,260,743 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,228,021,529 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 476,760,786 இனால் குறைவடைந்திருந்தது. சபையின் செயற்பாட்டு செலவுகள் ரூபா 4,566,344,326 இனால் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா

1,612,418,157 இனால் அதிகரித்திருந்த போதிலும் வீதிப் பயணிகள் போக்குவரத்து வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 7,045,280,367 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சி குறைவடைவதற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 வருடங்களில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை சபையின் பற்றாக்குறை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறை படிப்படியாக குறைந்திருந்தது. ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வினை கவனத்தில் எடுத்த பின்னர் சபையின் பங்களிப்பு 2011 ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆண்டின் போது அதிகரித்திருந்ததுடன் 2012 ஆண்டின் போது ரூபா 11,499,778,412 தொகையான பங்களிப்பு 2015 ஆண்டின் போது ரூபா 21,644,512,472 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாகும்.

- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் உரிய மாகாண போக்குவரத்து அதிகாரசபையை வினவி பொருளாதார உறுதிப்பாட்டினை ஏற்படுத்தி வினைதிறனுள்ள மற்றும் ஆக்கபூர்வமான முறைசார் பஸ் சேவை ஒன்றினை வழங்குதல்.
- மேற்கூறிய குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக சபையின் பிரேரணைகளை உற்படுத்தி மற்றும் செயற்படுத்துதலை மேற்கொள்ளப்பட வேண்டிய முறையினை இனங்கண்டு மற்றும் பல்வேறு திட்டங்களுக்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய உரிய செலுத்துனர்களை இனங்கண்டு மற்றும் மொத்தத் திட்டத்தினை செயற்படுத்தும் போது நேரிடக் கூடிய காலப்பகுதியினை குறிப்பிட்ட சபையினால் வருடாந்தத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். அந்த வருடாந்த திட்டத்திற்கு உரிய பாதீடும் தயாரிக்கப்பட வேண்டும்.
- சபையின் செயற்பாட்டு விடயங்களை பலமுள்ள உச்சமட்டத்தில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அந்த செயற்பாட்டு அலுவல்கள் நடாத்தப்பட வேண்டிய முறைப்படி சபையின் அலுவல்களை நடாத்திச் செல்லல்.
- பொதுப் போக்குவரத்து சேவையின் தரம்சார் தன்மையின் அபிவிருத்தி செய்யும் விதத்தில் போக்குவரத்து துறையில் வேறு திட்டங்கள் அல்லது சேவைகளை செயற்படுத்துதல்.
  2015 ஆண்டிற்கான சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பான கூட்டிணைந்த திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத்திட்டம், முன்னேற்ற அறிக்கை மற்றும் பாதீட்டின் படி மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபை சட்டத்தின் பிரகாரம் சபைக்குரிய அதிகாரத்தின் பிரகாரம் செயற்படுத்தக் கூடிய பின்வரும் விடயங்கள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- வீதிய பயணிகளுக்காக பஸ் தரிப்பிடங்களும் மறைப்புக்களும் வழங்குதல்
- நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் கடினமானவை என சபையினால் கவனம் செலுத்திய பாதைகளில் போதியளவு பஸ் சேவைகள் வழங்குவதற்கு முயற்சி செய்தல்.
- சபைக்கு சொந்தமான பஸ் தரிப்பிடங்களை வழங்குதல் மற்றும் பேணல்.

(ஆ) 2015 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது நெருங்குவதற்கு எதிர்ப்பாரத்துள்ள இலக்குகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாளாந்தம் ஓடக்கூடிய பஸ் வண்டிகளின் எண்ணிக்கையை 6000 வரை அதிகரிப்பதற்கு இலக்கு வைத்திருந்த போதிலும் திட்டப் பகுதியின் அறிக்கையின் பிரகாரம் நாளாந்த ஓடியிருந்தது 5270 பஸ் வண்டிகள் மாத்திரமே. அதன் பிரகாரம் 12 சதவீத இலக்கினை நெருங்குவதற்கு இயலாதிருந்துள்ளது.

(ii) 2015 ஆண்டின் போது ஓட்டுவதற்கு எதிர்பார்த்திருந்த கிலோ மீற்றர்கள் எண்ணிக்கை 643,184,516 தொகை எனினும் 440,424,544 கிலோ மீற்றர்கள் மாத்திரமே ஓடியிருந்தது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட கிலோ மீற்றர் எண்ணிக்கையில் 202,759,972 தொகை எனப்படும் 31.5 சதவீதத் தொகை ஓட்டுவதற்கு முடியாதிருந்தது.

(iii) நாளாந்த பாதை பதிவேட்டு வருமாம் ரூபா 80 மில்லியன் தொகை வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 66 மில்லியன் தொகை வருமானம் மாத்திரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட தொகையில் 17.5 இற்கான சதவீத நாளாந்த வருமானம் ஒன்றினைப் பெற்றிருக்கவில்லை.

(இ) முற்றாக பழுதுபார்க்க வேண்டிய பஸ் வண்டிகள் மற்றும் நாளாந்தம் ஏற்படுகின்ற சிறிய அளவினை பழுதுபார்த்தல்கள் காரணத்தினால் ஓட்டத்தில் இருந்து வெளியேற்றப்படும் பஸ் வண்டிகளைப் பழுதுபார்த்து ஓட்ட நிலைக்கு சேர்த்தல் இலக்காக இருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மொத்த பஸ் வண்டித் தொகுதி 7,797 எனினும் பின்வரும் காரணங்களினால் அந்தப் பஸ் தொகுதியில் பஸ் வண்டிகள் 1,511 தொகை எனப்படும் சுமார் 20 சதவீதம் ஓட்டுவதற்கு இயலாத நிலைமையில் காணப்பட்டது.

| விபரம் | ஓடப்படாத பஸ் வண்டிகளின் எண்ணிக்கை |
|---|---|
| டயர், டியூப் மற்றும் பட்டரி இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள் | 169 |
| தொகுதிகள், உப தொகுதிகள் இன்மையால் நிறுத்தப்பட்ட பஸ் வண்டிகள் | 400 |
| பரிசோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கும் பஸ் வண்டிகள் | 90 |
| அவசர விபத்துக்கள் காரணமாக பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 77 |
| ஓடும் போது ஏற்படும் சிறிய தொழிநுட்ப கோளாறுகள் காரணமாகப் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 261 |
| தொகுதிகள் பழுதுபார்த்தலில் காணப்படும் பஸ் வண்டிகள் | 226 |
| பாரிய பழுதுபார்த்தல் வேலைக்காக நிறுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகள் | 260 |
| பழுதுபார்த்தலின் மூலம் பொருளாதார நலன் கிடைக்காத பஸ் வண்டிகள் | 28 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 1511 |

பஸ் வண்டிகளில் 569 தொகை டயர், டியூப் மற்றும் தொகுதிகள் இன்மையினால் ஓடுவதில் ஈடுபடுத்தியிருக்கவில்லை. அதே போல் அந்த பஸ் வண்டித் தொகுதியில் 778 தொகை 15 வருடங்களை விடப் பழமையான பஸ் வண்டிகளாகும்.

(ஈ) பஸ் வண்டிகளை புனர்நிர்மாணம் செய்து வாகனத் தொகுதியில் சேர்க்கும் செயற்திட்டத்திற்காக 2015 ஆண்டிற்காக ரூபா 880 மில்லியன் தொகை சபையினால் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆண்டின் போது ரூபா 1037.12 மில்லியன் தொகை திறைசேரியில் இருந்து கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் சபையினால் அந்த முழுத்தொகை ஆகிய ரூபா 1,917.12 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சபையின் திட்டமிடல் பகுதியின் அறிக்கையின் பிரகாரம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இலக்காக இருந்த 861 பஸ் வண்டிகள் எனப்படும் 48 சதவீதம் புனர்நிர்மாணம் செய்வதற்கு இயலாதிருந்துள்ளது. எதிர்பார்த்த இலக்கினை நெருங்குதல் தொடர்பான விரிவான தகவல்கள் கீழே காணப்படுகின்றது.

| விவரம் | 2015 ஆண்டு<br>இலக்கு | <br>உள்ளவாறு நிலைமை | <br>நெருங்க இயலாது போன எண்ணிக்கை |
|---|---|---|---|
| என்ஜின் தொகுதிகள் | 720 | 500 | 220 |
| ஜியர் பெட்டி | 720 | 173 | 547 |
| பஸ் போர்ட் | 360 | 266 | 94 |
| கூட்டுத்தொகை | 1800 | 939 | 861 |

## 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான 127 ஏக்கர் காணி வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் அனுபவிக்கப்பட்டு வருவதுடன் அந்த காணிகளை திருப்பி பெறுவதற்காக, சட்டரீதியாக சாட்டுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 18 ஏக்கர் காணி சபையினால் நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும் அதற்காக காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கொடுப்பனவு விடுதலைப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்டம்பர் 15 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1966 ஜூலை 26 முதல் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த கொழும்பு 5, பூந்தோட்ட வீதியில் அமைந்துள்ள 3.4125 ஹெக்டயருக்கான அன்டஸன் கொல்ப் லின்க்ஸ் திடல், சாலிகா மண்டபம் மற்றும் விளையாட்டுத் திடலுக்குரிய காணி மற்றும் கட்டிடம் ரூபா 300,000 இற்கான பெறுமதி என நிதிக்கூற்றுக்களில் காணி கட்டிடங்களின் கீழ் காட்டியிருந்த போதிலும் அந்த காணியின் சட்டரீதியான உரிமையை சபை பெற்றிருக்கவில்லை. 2009 பெப்ரவரி 18 அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இந்த காணிக்காக கொடுப்பனவு விடுதலைப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்டம்பர் 15 அளவிலும் கொடுப்பனவு விடுதலைப் பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2004 செப்டம்பர் 15 திகதிய இலக்கம் அமப/04/1196/023/015-1 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மஹரகம தெஹிவளை பாதையில் அமைந்துள்ள 9167 இலக்க ஆரம்ப வரைபில் காட்டப்பட்டுள்ள தகனம் கலே வத்தை 160.02 பர்சஸ் காணி (ஹெக்டயர் 0.4055) 2004 நவம்பர் 09 திகதி சபையின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தக் காணி 2016 பெப்ரவரி மாதத்தில் ரூபா 112,000,000 இற்காக அரச பெறுமதி மதிப்பீட்டாளரினால் பெறுமதி மதிப்பீடு செய்திருந்ததுடன் 2017 செப்டம்பர் 15 கணக்காய்வுத் திகதி அளவிலும் இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 1957 இன் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனம் போக்குவரத்து சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்ட இலக்கம் 175, காலி வீதி இரத்மலான இல் அமைந்துள்ள 26.5 பர்சஸ் இற்கான காணி இரத்மலான பிரதேச செயலகம் அமைப்பதற்காக அரசாங்க அதிபருக்கு வழங்கியிருந்த போதிலும் இந்த காணியை பெறுமதி மதிப்பீடு செய்து பணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போக்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது தலைமை அலுவலகத்தில் இருந்து வழங்குனர்கள் தெரிவு செய்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வழங்குனர்களின் டிப்போக்களுக்கு நேரடியாகஉதிரிப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்தது. எனினும் டிப்போவினால் உரிய இன்வொயிஸ் பத்திரங்கள் மற்றும் பண்டங்கள் கிடைக்கப்பட்டதற்கான சான்றிதழ்கள் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக தலைமை அலுவலகத்தின் கொள்வனவு முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,831,859,235 தொகையான தீர்க்கப்படாத முற்பணங்கள் மீதி 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,907,294,471 வரை அதிகரித்திருந்தது. பண்டங்கள் கிடைத்த பின்னர் பணம் செலுத்தப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யும் போது செயற்பட்டிருந்தமை முற்பண மீதி அதிகரித்திருந்ததற்கான காரணமாக உள்ளது.

(எ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்திலுள்ள 58 கடைகளில் 09 இற்கு மாத்திரம் 2015 திசெம்பர் 31 திகதி அளவில் வாடகை உடன்படிக்கைகள் செல்லுபடியான நிலைமையில் காணப்பட்டதுடன் மீதியான 49 உடன்படிக்கைகளில் வாடகை உடன்படிக்கைகள் காலங்கடந்தவையாக காணப்பட்டன. அவற்றில் சில உடன்படிக்கைகள் 1970 ஆண்டு முதல் காணப்படுகின்றது எனவும் அந்த வாடகை உடன்படிக்கைகளை இற்றைவரைப்படுத்துவதற்காக உரிய பகுதியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஏ) மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் வாடகைக்குக் கொடுத்துள்ள கடைகளுக்காக உப நீர்மானிகள் மற்றும் உப மின்சாரமானிகள் பொருத்தப்பட்டு நீர் மற்றும் மின்சாரம் வழங்கப்பட்டு 2015 ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டு அறவிடப்பட்ட தொகை முறையே ரூபா 1,197,133 தொகை மற்றும் ரூபா 2,314,394 தொகை எனினும் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றிற்காக ரூபா 7,130,972 தொகை மற்றும் ரூபா 7,975,010 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் நீர் மற்றும் மின்சாரத்திற்காக ரூபா 5,933,839 தொகை மற்றும் ரூபா 5,660,616 தொகை மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. இங்கு நுகர்வு செய்யும் மின்சாரம் மற்றும் நீர் அலகுகள் அதிகரிக்கும் போது அதனது ரேட்டும் அதிகரிக்கின்றமையால் மத்திய பஸ் வண்டி அலுவலகத்தினால் கூடிய தொகையொன்று செலுத்த நேரிடுகின்றதுடன் கடை வாடகையாளரிடம் மின்சாரம் மற்றும் நீர் சிட்டைகளுக்காக அறவீடு செய்யும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் குறைந்த ரேட் அறவீடு செய்தல் இந்த நிலைமைக்கு காரணமாகியிருந்தது என அவதானிக்கப்பட்டது.

**4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் நலன்புரி விடயங்களுக்காக ஊழியர் தண்டப் பணக் கணக்கில் ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடன்கள் தொடர்பாக அறவிடப்பட்டிருந்த ரூபா 84,733,235 இற்கான கடன் தவணைப்பணம் உரிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஊழியர் சேமலாப நிதியில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கியிருந்த கடனுக்காக ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழித்திருந்த தவணைப் பணம் ரூபா 249,486,944 தொகை உரிய நிதியத்திற்கு செலுத்தப்படாமல் சபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. சபையின் சேமலாப நிதியம் தற்போது முடிவுறுத்தப்பட்டிருந்தமையால் அந்தப் பணத்தை தீர்க்கும் முறை தொடர்பாக தகவல்கள் கணக்காய்வின் போது சிக்கல் தன்மையுடன் காணப்பட்டது.

(இ) கதிர்காமம் ஓய்வு விடுதியின் 02 ஆம் கட்டட நிர்மாண வேலைக்காக ரூபா 7,912,368 தொகை செலுத்தியிருந்த போது 2013 ஜுன் 20 திகதி ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலையை இடைநிறுத்தியிருந்தார். இதன் காரணமாக சபைக்கு நேரிட்டுள்ள நட்டத்தினை குறைப்பதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 658,351 இற்கான செயலாற்றுகை பிணை முறியினை செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன் காசாக்காமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிடம் அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2008 ஜனவரி 25 திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் ம்றறும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வாகனங்களின் சேவை அலுவல்கள் செய்யும் அனைத்து டிப்போக்களினாலும் அது தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும் அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 6 பிராந்தியங்களில் 07 டிப்போக்கள் மாத்திரம் இந்த அனுமதிப்பத்திரம் பெற்றிருந்ததுடன் 35 டிப்போக்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

**4.4 தோற்றக்கூடிய ஒழுங்கீனங்கள்**

2012 முதல் 2015 ஆண்டு வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் செய்தமான டிப்போக்களுக்காக நெப்கோ பேரின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ள வில் தகடுகள் வழங்குவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பணம் செலுத்திய போது நிதிப்பிரமாணங்கள் 137 மற்றும் 138 இன் பிரகாரம் வில்தகடு பெற்றதனை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் நெப்கோ கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை அடிப்படையாக வைத்து சபையினால் ரூபா 127,150,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை வழங்குனர் உரிய வில் தகடுகளை வழங்கியிருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாரியபொல மற்றும் மாஹோ டிப்போக்களினால் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படாமையினால் 2015 ஆண்டின் போது ரூபா 2,718,706 இற்கான தொகை மிகைவிதிப்பாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு முறையே செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 5,291,223,198 தொகை மற்றும் ரூபா 52,065,963 உரிய தினத்தில் அனுப்பப்படாமையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 124,276,193 தொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 11,458,689 தொகை மிகை விதிப்பாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தலைமை அலுவலகத்திற்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலவு செய்யப்பட வேண்டிய ரூபா 45,491,197 இற்கு பங்களிப்புத் தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 12,728,496 இற்கான மிகைவிதிப்புத் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரகாரம் சபையினால் செலுத்த வேண்டியயிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த சபையின் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 பந்தியின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான வளங்கள் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கக் கூடாதெனினும் சபையின் பாதுகாப்பு பகுதியை சேர்ந்த உத்தியோகத்தர்களை மற்றும் வாகனங்களை போக்குவரத்து அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. இங்கு போக்குவரத்து அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பகுதியின் ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் படியாக 2015 ஆண்டிற்காக சபையினால் ரூபா 4,723,789 தொகையும் மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றிருந்த 03 வாகனங்கள் போக்குவரத்து அமைச்சுக்கு மற்றும் பிரதிப் போக்குவரத்து அமைச்சு அலுவலகங்களுக்கு ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்டு அதற்கான எரிபொருள் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 3 மோட்டார் வாகனங்களுக்கான வாடகையாக ரூபா 356,852 தொகை மற்றும் சாரதிகளின் சம்பளம் மற்றும் மேலதிக நேரப்படியாக ரூபா 393,392 தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.7 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆண்டின் போது ரூபா 97,462,160 கிரயத்திற்கு 143 பஸ் வண்டிகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக வெஸ்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் வெஸ்கோ நிறுவனம் தற்போது செயற்படு நிலைமையில் காணப்படாமையினால் உரிய பஸ் வண்டிகளை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்ளல் தொடர்பாக ஆபத்து நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் இது தொடர்பாக போதியளவு வெளிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் தகவல்களின் பிரகாரம் 2010 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்புத் தொகையாக ரூபா 3,695,712,194 தொகை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் அப்பணம் உரிய முறையில் சபையினால் பேணப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பாமையால் குறிப்பிட்ட காலத்திற்காக கிடைக்க வேண்டிய வட்டித் தொகையினை ஊழியர்கள் இழந்துள்ளனர்.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 9வது அத்தியாயத்திற்கு இணங்க பிரகாரம் இலங்கை போக்குவரத்து சபைக்காக அமைப்பு வரைபடமொன்று, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறை என்பன தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையின் டிப்போக்களில் சாரதிப் பதவிகளில் 28 சதவீதம் மிகை ஒன்று முதல் 35 சதவீதம் வரை பற்றாக்குறை வரையான வீச்சில் பரவி இருந்ததுடன் நடத்துனர் பதவிகளில் 51 சதவீதம் மிகையொன்று முதல் 36 சதவீதம் வரை பற்றாக்குறைவினால் பரவிக் காணப்பட்டது. எவ்வாறாயினும் நடத்துனர்கள் மற்றும் சாரதிகள் பதவிகள் மிகையாகக் காணப்பட்ட 25 டிப்போக்கள் காணப்பட்டதுடன் அந்த மிகை பதவியணியினர் சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறையாக இருக்கும் டிப்போக்களுக்கு இணைத்து சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் 2015 மே 01 திகதியில் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 235 சாரதி ஊழியர்கள் மற்றும் 528 நடத்துனர் ஊழியர்கள் பொருத்தமற்ற கருமங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2015 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 01 வருடம் 05 மாதங்கள் தாமதித்து 2017 ஜுலை 19 திகதியே கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நெருங்கக் கூடிய விதமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்களை தெளிவாக இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் சமர்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் சபையின் நிதி நிலைமையைக் கவனத்தில் எடுக்காமல் நெருங்க முடியாத குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.3 பெறுகைகள் திட்டம்

2006 அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகைள் திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், 4.2.1(ஆ) இன் பிரகாரம் குறைந்த பட்சம் 3 வருட காலத்திற்காக எதிர்ப்பார்க்கும் பெறுகைள் அலுவல்கள் பிரதான பெறுகைகள் திட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனினும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரதான பெறுகைகள் திட்டம் அவ்வாறு தயாரித்திருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை போக்குவரத்து சபையினால் 2015 ஆண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டின் காணப்பட்ட தகவல்கள் மற்றும் 2015 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற தகவல்களை இணக்கஞ் செய்யக்கூடிய விதமாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சபையினால் பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே முரண்கள் காணப்படுகின்றனவா என மற்றும் அவை நிறுவனத்தின் நிதி அலுவல்களை கட்டுப்படுத்துவதற்காக கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வின் போது இணக்கஞ் செய்யக்கூடியதாக இருந்த செலவுகளை பரிசோதனை செய்த போது சபையின் 19 செலவு விடயங்களில் பாதீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதியிடையே 4 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டது.

(இ) சபையின் பாதீட்டு மொத்த வருமானம் ரூபா 44,417,885,626 தொகையாக காணப்பட்டதுடன் உள்ளவாறான மொத்த வருமானம் ரூபா 39,828,386,904 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 4,589,498,722 எனப்படும் 10.34 சதவீதத்திற்கான பிரதிகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 5.5 சுற்றாடல்சார் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

2008 ஜனவரி 25 திகதிய 1533/16 இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம், 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் பிரிவு 23 இன் பிரகாரம் மாசடைவதற்கு வழிவகுத்து சுற்றுச்சூழலுக்கு கழிவுப் பொருட்களை வெளிப்படுத்துதல், வைப்புச் செய்தல் அல்லது வெளியேற்றுதல் ஆகிய அனைத்து அலுவல்களுக்குமாக மேற்கூறிய பிரிவின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் ஒன்று பெறப்பட வேண்டும். இந்த வர்த்தமானியின் பிரகாரம் இலங்கையில் பயன்படுத்தப்படும் அனைத்து மோட்டார் வாகனமும் வாயுப் புகை பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு இணக்கச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் கட்டளை 9 இன் பிரகாரம் மோட்டார் வாகனம் ஒன்றில் பஸ் வண்டிகளும் உட்படுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளமையால் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளுக்காகவும் புகை பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும் 10 பிராந்திய அலுவல்களின் தகவல்களின் பிரகாரம் 2015 ஆண்டின் போது மொத்த எண்ணிக்கையான 6729 பஸ் வண்டிகளில் 550 பஸ் வண்டி பத்திர புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மொத்த பஸ் வண்டிகளின் எண்ணிக்கையில் 92 சதவீதம் புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டப்படுவதினால் அரச நிறுவனங்களின் மூலம் பாரிய சுற்றாடல் மாசடைதல் ஒன்று மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்கள் பிரமாணங்களுடன் சேதங்களுக்கு இணக்கமின்மை ஒன்று நிகழ்ந்துள்ளது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | சபையின் பஸ் வண்டிகளின் விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்படாமை. |
| | | (ii) | சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கணக்கீடு செய்வதில் உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமாகக் காணப்படல் |
| | | (iii) | வருடாந்த சொத்துக்கள் மெய்மையாய்தல் ஒன்று மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | பெறவேண்டிய பணத்தை விரைவாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | சரியான முறையில் வங்கி இணக்கக் கூற்றுத் தயாரிக்காமை. |
| | | (iii) | முற்பணப் பேரேடு பேணப்பட்டிருக்காமை |
| | | (iv) | ஊழியர் பிணை வைப்புக்களுக்காக பதிவேடு பேணப்படாமை மற்றும் ஊழியர் பிணை வைப்புக்களை சபையின் செலவுகளுக்காக பயன்படுத்தல். |
| | | (v) | நிதிப் பிரிவினால் தேவை ஒன்றின்றி வங்கி நடைமுறைக் கணக்குகள் பேணல், மாதாந்தம் இணக்கம் செய்யாமை மற்றும் சீராக்கல் மேற்கொள்ளாமை. |
| (இ) | முற்பணங்கள் தீர்த்தல் | (i) | பெற்றுக்கொண்ட முற்பணங்கள் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்ததுடனேயே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | காலத்திற்குக் காலம் இணக்கம் செய்தல் மற்றும் தீர்த்தல் செய்யப்படாமை |
| (ஈ) | வருமானம் நிருவாகம் | | பிரயாண அனுமதிப்பத்திர வருமானத்தை சேகரிப்பதற்காக தொடர் இலக்கத்துடனான அச்சிடப்பட்ட இன்வொயிஸ்கள் பயன்படுத்தாமை. |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | துலைமை அலுவலகத்திலிருந்து கட்டளையிடப்பட்ட வழங்குனர்களினால் டிப்போக்களுக்கு நேரடியாக வழங்கியிருந்த பண்டங்கள் தொடர்பாக தகவல்கள் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்காமை மற்றும் இணக்கங்கள் மேற்கொள்ளப்படாமை. |
| | | (ii) | பரிசோதனை மேற்கொள்ளாமல் பண்டங்கள் ஏற்றுக்கொள்ளல். |